Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 11 |
| | | Defence |
| | | Court |
| Name | : ராமர் | |
| Father / Husband Name | : காளியப்பன் | |
| Village | : அருப்புக்கோட்டை | |
| Taluk | : அருப்புக்கோட்டை | |
| Caste | : | |
| Calling | : ஆசாரி வேலை | |
| Religion | : இந்து | |
| Age | : 49 | |

( 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 11.11.2025.

**வழக்கு விசாரணையின் போது இலவச வழக்கறிஞர் திரு.K.ஜோதிமணி, பதிவு எண் M.S.No.1511/2017 நீதிமன்றத்தில் ஆஜரில் இருந்தார். எதிரிகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்கப்படும் என்று தெரிவித்தபோதும் அவர்களாகவே இந்த வழக்கை நடத்துவதாக கூறிவிட்டார்கள். ஆகையால், இலவச வழக்கறிஞர் திரு.K.ஜோதிமணி, அவர்கள் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**முதல் விசாரணை :-**

1. நான் அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் ஆசாரி வேலை செய்து வருகிறேன். கொரோனா காலகட்டத்திற்கு முன்பாக நான் அருப்புக்கோட்டையில் ஆயிரங்கண் மாரியம்மன் கோவிலுக்கு எதிரே சாலியர் மகாஜன சங்கத்திற்கு பாத்தியப்பட்ட கட்டிடத்தில் நான் வாடகைக்கு கடை எடுத்து பழ வியாபாரம் செய்து வந்தேன். அப்போது ஆஜர்எதிரிகள் அந்த பகுதிக்கு வந்து டீ அருந்திவிட்டு பொருட்களை வாங்கி செல்வார்கள். சுமார் 5—6 வருடங்களுக்கு முன்னர் நான் பழக்கடை நடத்தி வந்த அதே பகுதியில் மெயின்ரோட்டில் வாடகைக்கு இருந்த ஒரு பெண்மணியை நகைக்காக சிலர் அவரது வீட்டிற்குள் சென்று கொலை செய்துவிட்டதாக பின்னர் தெரிந்துக்கொண்டேன்.

2. போலீசார் விசாரணைக்காக அந்த பெண்மணி வசித்து வந்த வீட்டிற்கு வந்தபோது அருகில் நான் பழக்கடை வைத்து நடத்தி வந்ததால் என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். எல்லோரிடமும் கையெழுத்து வாங்குகிறோம் என்று கூறி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அந்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. யார் கொலை செய்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து சாட்சியிடம் விசாரிக்க அனுமதி கோரப்பட்டதன் மூலம் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை –**

3. கடந்த 01.02.2019 அன்று காலையில் எனது கடைக்கு வந்தபோது எனது கடைக்கு தெற்குப்பக்கம் ஆயிரங்கண் மாரியம்மன் கோவிலுக்கு சொந்தமான 400 என்ற கதவு எண் கொண்ட வீட்டில் குடியிருந்த பாலசுப்பிரமணியம் என்பவரது மனைவி கனகவள்ளியை யாரோ கொலை செய்து அவர் போட்டிருந்த தங்க கம்மல், தங்க மூக்குத்திகளை திருடிச் சென்றுவிட்டதாக சொன்னதாகவும், 31.01.2019 ஆம் தேதி இரவு சுமார் 11.15 மணியளவில் அருணகிரியின் பெரியப்பா மகன் பாலகிருஷ்ணன் கனகவள்ளி இறந்து கிடந்ததை பார்த்து அருணகிரி மற்றும் அவரது சொந்தக்காரங்களுக்கு தகவல் சொன்னதாகவும், கணேசன் என்பவரும் பாண்டியராஜன் என்பவரும் கனகவள்ளியின் மகன் அருணகிரியிடம் கனகவள்ளி வீட்டிற்குள் கீழே விழுந்து ரத்தக்காயம் பட்டு இறந்திருக்கலாம் என்று சொல்லி இரத்தத்தை கழுவி விடும்படி சொன்னதால் இரத்தத்தை கழுவிவிட்டு பிறகு கனகவள்ளியை தூக்கி பார்த்தபோது கனகவள்ளி என்பவரின் கழுத்தில் வெட்டுக்காயமும் குத்துக்காயமும் இருந்ததாகவும், அவரது தங்க கம்மல், தங்க மூக்குத்தி ஆகியவற்றை காணவில்லை என்பதால் யாரோ கனகவள்ளியின் தங்க நகைகளை திருடவேண்டும் என்ற நோக்கத்தில் கனகவள்ளியை கொலை செய்து அவரது தங்க நகைகளை திருடிச்சென்றுவிட்டதாகவும், இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாகவும் தெரிந்துக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல.

4. 02.12.2019 ஆம் தேதி ராஜா என்ற சந்தனராஜ், பாண்டியராஜன் மற்றும் கணேசன் ஆகியோர்களை கனகவள்ளியை கொலை செய்தது சம்மந்தமாக கைது செய்திருப்பதாகவும், ராஜா என்ற சந்தனராஜ் கனகவள்ளியை கத்தியால் குத்தி கொலை செய்து அவரது தங்க

கம்மல்கள், தங்கு மூக்குத்திகள் ஒரு கவரிங் செயின் ஆகியவற்றை திருடி பாண்டியராஜனிடம் கொடுத்து பின் பாண்டியராஜன் கணேசனிடம் சொல்லி கணேசன் மேற்படி நகைகளை பாண்டியராஜன் வீட்டில் உள்ள சுவிட்ச் பாக்ஸில் மறைத்து வைக்கச்சொன்னதாகவும் அந்த நகைகளில் ஒரு ஜோடி மூக்குத்தியை செலவுக்காக கணேசன் எடுத்து வைத்துக் கொண்டதாகவும் கேள்விப்பட்டதாகவும், 31.01.2019 ஆம் தேதி காலை சுமார் 09.45 மணியளவில் ராஜா என்ற சந்தனராஜ் எனது கடைக்கு அருகில் உள்ள தனசேகர் என்பவரின் டீக்கடையில் டீ வாங்கி கடைக்கு எதிரே உள்ள இடத்தில் வைத்து குடித்துக்கொண்டு அங்கிருந்த இரண்டு பேரிடம் பேசிவிட்டு தெற்குப்பக்கமாக கனகவள்ளியின் வீட்டிற்கு போனதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 12 |
| | | Defence |
| | | Court |
| Name | : கதிர்வேல் | |
| Father / Husband Name | : சுப்பிரமணி | |
| Village | : அருப்புக்கோட்டை | |
| Taluk | : அருப்புக்கோட்டை | |
| Caste | : | |
| Calling | : பெட்டிக்கடை உரிமையாளர் | |
| Religion | : இந்து | |
| Age | : 43 | |

( 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 11.11.2025.

**முதல் விசாரணை :-**

1. நான் அருப்புக்கோட்டை மணிநகரம், செவல்கண்மாய் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் அருகே

சாலியர் மகாஜன சங்கத்திற்கு பாத்தியப்பட்ட கட்டிடத்தில் நான் வாடகைக்கு கடை எடுத்து பெட்டிக்கடை வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 31.01.2019 அன்று என் கடைக்கு அருகே வசித்து வந்த கனகவள்ளி என்ற பெண்மணியை நகைக்காக கொலை செய்து விட்டதாக மறுநாள் காலை கடை திறக்கும்போது எனக்கு தெரியவந்தது. சுமார் 4–5 நாட்கள் கழித்து மேற்சொன்ன கனகவள்ளியை கணேசன் மற்றும் பாண்டியராஜன் ஆகியோர் கொலை செய்துவிட்டதாக தகவல் தெரியவந்தது. கொலை சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். இந்த சங்கதிகளை தான் போலீசார் விசாரணையில் கூறினேன்.

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

**(எதிரியே சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்)**

இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

**(எதிரியே சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்)**

கொலை சம்பவத்தில் நாங்கள் தான் ஈடுபட்டோம் என்று எப்படி தெரியவந்தது என்றால் கடைக்கு வந்தவர்கள் கூறினார்கள். நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.